**தலைப்பு 209 – தேசிய சுவடிக்காப்புத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு - 209 தேசிய சுவடிக்காப்புத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 திசெம்பர் 15 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 332.91 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 200.04 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 132.87 மில்லியன் அதாவது 40 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 112.08 | 104.69 | 7.39 | 7 |
| மூலதன | 220.83 | 95.35 | 125.48 | 57 |
| **மொத்தம்** | **332.91** | **200.04** | **132.87** | **40** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய விடய இலக்கம் 20901 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 6.50 | 6.26 | 3.00 | 3.99 | 26.00 | 15.65 |

## 2.3 பொதுவைப்புக் கணக்கு

திணைக்களத்தின் 4 பொது வைப்புக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 9.08 மில்லியன் ஆக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்பு கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6000/0000/00/0001/0121/000 | 269,847 |
| 6000/0000/00/0002/0170/000 | 20,000 |
| 6000/0000/00/0015/0091/000 | (751,281) |
| 6000/0000/00/0016/0115/000 | 9,545,312 |
| **மொத்தம்** | **9,082,878** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

தேசிய சுவடிக்காப்புத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பராமரிக்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

திணைக்களத்தால் நிதிப்பிரமாணம் 454(1) இன் பிரகாரம் இருப்புக்கள் பதிவேடு முறையாக பராமரிக்கப்பட்டு நாளதுவரையாக்கப்படவில்லை என கணக்காய்வு தெரிவுச்செய்வையின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டில் ரூபா 15.7 மில்லியன் தொகையை செலவழிப்பதன் மூலம் உள்நாட்டு பிரதிநித்துவ முகவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வரைபட ஸ்கானர்கள் தொடர்பான அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதற்கான கடிதத்தின் மூலப்பிரதி, உத்தரவாதச் சான்றிதழ்கள் உற்பத்தி செய்யப்பட்ட வருடத்தை உறுதிப்படுத்தி நிரூபிப்பதற்கான ஆவணங்கள் போன்ற கணக்காய்வு சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

19 செலவின விடயங்களிற்காக மேலதிக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையால் ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்புக்கள் உரிய செலவின விடயங்கள் தொடர்பான தேறிய ஏற்பாட்டின் 25 சதவீதத்திலிருந்து 100 சதவீத வரையான வீச்சிலிருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

(அ) நிதிப்பிரமாணம் 427 இன் பிரகாரம் திறைசேரிப் புத்தகங்களுடன் திணைக்களத்தின் கணக்குப் புத்தகங்களை ஒப்பீடு செய்வதற்கு இணக்கக்கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த வகையில் பொது வைப்புக் கணக்கு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது வைப்புக் கணக்கு இலக்கம் 6000/0000/00/0015/0091/000 இல் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி இறுதிக் கணனி அச்சுப்பிரதியின் பிரகாரம் எதிர்மறைப் பெறுமதி ரூபா 752,281 தொகையானதுடன் இந்த மீதியானது ஒதுக்கீட்டுக்

கணக்கு மற்றும் வைப்புக் கணக்குகளின் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பொழிப்புக் கூற்றுக்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

விடய இலக்கம் 20901 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்கக் கூற்றுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுச்செவ்வையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியிலுள்ளவாறு நிலுவையாக இருந்த அறவீடுகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 415,833 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகள் 03 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான காலமாக காலங்கடந்திருந்த போதிலும், அந்த நிலுவை மீதிகளை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ஆ) திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கிலுள்ள ஆரம்ப மீதிகளிற்கிடையில் ரூபா 65,638 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**உள்ளகக் கணக்காய்வு**

உள்ளக கணக்காய்வு பதவி அங்கீகரிக்கப்பட்ட போதிலும், உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுச் செவ்வையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(அ) இரத்தினபுரி உப அலுவலகத்திற்காக 2015 திசெம்பர் இல் ரூபா 2,927,481 பெறுமதியில் உலோகச்சட்டம் மற்றும் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த உபகரணமானது உரிய அலுவலக கட்டிடத்தில் வைக்காமல் தொல்பொருளியல் திணைக்களத்தில் 2017 ஆகஸ்ட் இலும் குறைப்பயன்பாட்டிலிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் சட்ட வைப்பு பிரிவிற்காக ரூபா 2,459,553 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட சட்டகங்கள் உரிய தொழிற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய சுவடிகள் திணைக்களத்தின் சிற்றுண்டிச் சாலையானது நகர அபிவிருத்தி அதிகாரசபையால் ரூபா 14,853,858 தொகையை செலவழிப்பதன் மூலம் கட்டப்பட்டிருந்த போதிலும், அதனுடைய கூரையானது பொருத்தமான நியமங்களிற்கிணங்க கட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், சிற்றுண்டிச்சாலையின் சுவர் வென்ரிலேரனுடன் கட்டுவதற்கு பதிலாக மெழுகால் செய்தமையால் சிற்றுண்டிச்சாலையினுள் மழைநீர் ஒழுகியமையால் அது 18 மாதங்கள் காலப்பகுதிக்காக மாத்திரம் பராமரிக்கப்பட்டது. 2016 மே இல் மூடப்பட்டு 2017

செப்தெம்பரிலும் ஆரம்பிக்கப்படாத சிற்றுண்டிச்சாலை தொடர்பான செலவினம் பயனற்ற செலவீனமாகவுள்ளதென அவதானிக்கப்பட்டது.

**3.8 உள்நாட்டு நிதியளிப்பின் கீழ் செயற்திட்டங்களை அமுல்படுத்தல்**

**ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேசிய சுவடிகள் திணைக்களத்தின் பழைய கட்டிடத்தின் இலத்திரனியல் சுற்று முறைமையை பூர்த்தி செய்தலினை நவீனமயப்படுத்தலுடன் தொடர்பான ஒப்பந்தம் 2016 திசெம்பர் 29 இல் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதற்காக கட்டிடங்கள் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு ரூபா 13,598,750 தொகையானதுடன் அந்த பெறுமதியின் ரூபா 5,608,059 தொகைக்கான காசோலைகள் 2016 திசெம்பர் 31 இல் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. எனினும், 2017 செப்தெம்பர் 21 அளவில் 8 மாதங்கள் கடந்திருந்த போதிலும் அத்தகைய இலத்திரனியல் சுற்று நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. அத்தகைய கட்டிடத்தின் திருத்தலின் பூர்த்தியாக்கலிற்கான தேவைப்பாடு ஒன்று இருந்தபோதிலும் இலத்திரனியல் கூற்று நவீனமயப்படுத்த நடவடிக்கைகளிற்காக மாத்திரம் கொடுப்பனவுகள் மேற்கொண்டமை இது தொடர்பில் காரணமாகவிருந்தது.

**3.9 செயலாற்றல்**

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

திணைக்களம் பிரதான பணிகளை போதியளவில் நிறைவேற்றாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது எண்முறைப்படுத்தல் மூலம் மக்களின் பயன்பாட்டிற்காக 5000 வேறுபட்ட வகையான வரைபடங்கள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்கான எந்த வரைபடமும் 2017 செப்தெம்பர் 18 வரை எண்முறையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரகசிய பதிவுகள் பிரிவில் 16,000 த்தை மிஞ்சிய ஏடுகள் வைப்புப் பெட்டிகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அத்தகைய பொதிகளை பொதியிடுவதற்கு பொருத்தமான இடம் தயார்படுத்தப்பட்டமையால் குறித்த விடயத்திற்கு தொடர்புடைய அலுவலரின் அலுவலக அறை ஸ்கானிங் (Scanning) பிரிவு மற்றும் கட்புலனாகும் ஒளிப்பிரிவு (Audio Visusal) போன்ற இடங்களில் அவையிருந்தது.

(இ) சட்ட வைப்பு களஞ்சியம் ஸ்தாபிக்கப்பட்ட 6 மாடிகளைக் கொண்ட பழைய கட்டிடத்தில் இரண்டாம் தளத்திலுள்ள பல இடங்களினூடாக மழைநீர் ஒழுகின்றமை அவதானிக்கப்பட்டது. மழைநீரினால் ஈரம் இருப்பதால் ஏடுகள் அழிவதற்கான சாத்தியமுள்ளதென்பதுடன் அந்த மழைநீரானது கட்டிடத்தின் உள்ள தன்மையிலும் அதன் ஆயுட்கால இடரிலும் தாக்கத்தை ஏற்படுத்துமென அவதானிக்கப்பட்டது. பல வருடங்களாக இந்த நிலைமை தொடர்ந்திருந்த போதிலும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரசுரிப்பாளர்களால் புத்தகங்கள் மற்றும் பத்திரிகையாளர் பதிவு பிரிவுக்கு கையளிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற புத்தகங்கள் மற்றும் பிரசுரிப்புக்கள் தொடர்பான

விபரங்கள் உரிய நிறுவனங்களிற்கிடையில் பகிர்ந்தளித்த பின்னர் கணனிமயப்படுத்த வேண்டும். எனினும், இந்த செயற்பாடு தாமதமானமையால் 2016 தொடர்பாக இந்த வகையில் 9496 புத்தகங்கள் மற்றும் பிரசுரங்கள் கணனிமயப்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(உ) தேசிய சுவடிகள் திணைக்களத்திற்கு கையளிக்கப்படுகின்ற பழைய புத்தகங்கள், கடிதங்கள், பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளானது களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்துவதற்கு முன்னர் எரித்தலானது பொதுவான நடைமுறையாகவிருந்தது. எனினும், அத்தகைய முறையில் நடவடிக்கை எடுக்காமல் களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்திய பின்னர் உரிய ஏடுகளில் பூச்சிகள் இருந்த சந்தர்ப்பத்தில் மாத்திரம் எரிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எனினும், களஞ்சியப்படுத்த முன்னர் வேறுபட்ட பூச்சிகளை எரிப்பதற்கான தேவைப்பாடானது பெறப்பட்ட பழைய புத்தகங்களில் இருந்த பூச்சிகளானது மனித கண்களுக்கு தெரியாதிருந்தமை என அவதானிக்கப்பட்டது.

(ஊ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல்கள் சேவைகள் சபையால் 2016 ஆம் ஆண்டில் பதிவு இலக்கங்கள் கொடுக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் பிரசுரங்களின் எண்ணிக்கை 12,572 ஆகவிருந்தது. எனினும், அதில் தேசிய சுவடிகள் திணைக்களத்திற்கு பெறப்பட்ட புத்தகங்கள் மற்றும் பிரசுரங்களின் எண்ணிக்கை 4,054 ஆகும். இது பதிவு செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கையின் 32 சதவீதமாகவிருந்ததுடன் சட்ட வைப்பிற்கு 8,518 புத்தகங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. அதனால், போதிய மேற்பார்வையானது உரிய அச்சிடல் கூடங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 3.10 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

### சீராக்கலிற்கான மீதிகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றில் உள்ளடக்கியுள்ள 6 மாதங்களிற்கு மேற்பட்ட இனங்காணப்படாத வரவு மீதிகளின் பெறுமதி ரூபா 12,230 தொகையானதுடன் இனங்காணப்படாத பெறுகைகளின் பெறுமதி ரூபா 61,545 தொகையாகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 இலிருந்து 2016 திசெம்பர் 31 வரை தேறாத காசோலையொன்றாக ரூபா 88,500 தொகையான மீதியை உள்ளடக்கி வங்கி இணக்கக்கூற்றுக்கள் மீதிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், அத்தகைய தேறாத காசோலைகள் திணைக்களத்திற்கு சொந்தமாகவிருந்ததுடன் திணைக்களமானது அந்த மீதி தொடர்பாக ஏற்றுக்கொள்ளக் கூடிய விளக்கத்தை வழங்குவதற்கு தவறியது.

## 3.11 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

துறைமுக மற்றும் விமான நிலைய வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி வழங்குனரால் ஏற்படுத்த வேண்டிய போதிலும், துறைமுக மற்றும் விமான நிலைய வரியாக ரூபா 12,699,450 ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அமைச்சரவையின் தீரமானத்தால் நடமாடும் சட்டகங்கள் ஒப்பந்தத்தினை ஸ்தாபித்தல் தொடர்பாக ரூபா 6,733,040 தொகையான தேசத்தை கட்டியெழுப்பும் வரியும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.12 வழமைக்கு மாறான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் வழமையிலிருந்து வேறுபட்டிருந்தது. அத்தகைய சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**அரச பெறுகை செயன்முறையிலிருந்து வேறுபடுதல்**

(அ) ரூபா 24,642,139 தொகையான தளபாடத்தை கொள்வனவு செய்யும் செயற்பாடு மத்திய பொறியியல் ஆலோசனை அமைப்பிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அத்தகைய பெறுகை செயற்பாட்டிற்கு போதியளவு நேரம் இல்லாதிருந்ததுடன் அதற்காக அமைச்சரவையின் அனுமதியும் வேண்டப்படும் என குறிப்பிடப்படுவதுடன் அமைச்சரவையில் அத்தகைய அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. அங்கு, 2012 யூலை 02 ஆந் திகதிய அமப/12/0845/555/006 ஆம் இலக்க அமைச்சரவை தீரமானமுள்ள சந்தர்ப்பத்திலும் உரிய உபகரணத்தை கொள்வனவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதுடன், அரச தளபாட கூட்டுத்தாபனம், இலங்கை அரச வியாபார (பொது) கூட்டுத்தாபனம் அல்லது ஏனைய அரச நிறுவனங்கள் அல்லது திறந்த கேள்வி செய்முறை பின்பற்றுவதனால் கொள்வனவு செய்வது பொருத்தமானது என குறிப்பிடப்படுகின்றது. ஆகையால், அத்தகைய கொள்வனவுகள் அமைச்சரவையின் தீர்மானத்துக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) அரச பெறுகை வழிகாட்டிகளின் 8.9.1 ஆம் வழிகாட்டிகளிற்கு முரணாக உரிய ஒப்பந்தகாரருடன் எழுத்து மூலமோ அல்லது கையொப்பமிட்டோ ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் ரூபா 1,640,000 தொகையான 4000 புத்தகங்கள் மற்றும் பிரசுரங்கள் வைப்புப் பெட்டிகளின் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டது. அதனால், அரசானது வழங்குனர் பொருட்களை முறையாக வழங்காமை தொடர்பாக அரசானது சுணக்க கட்டணத்தை அறவிடமுடியாத நிலையிலிருந்தது.

(இ) அரச பெறுகை வழிகாட்டிகளின் 2.5.1 (ஆ) வழிகாட்டியின் பிரகாரம், உறுதிப்படுத்தல்கள் இல்லாமல் ஸ்கானரின் கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், இந்த வகையில் 2016 ஆம் ஆண்டில் வரைபடங்களை எண்முறைப்படுத்தல் தொடர்பான செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு மேலாக ரூபா 12,572,859 தொகைக்காக மேலதிக ஏற்பாட்டை பெறவேண்டியிருந்தமை அவசியமானதாகவிருந்தது. இந்த கொள்வனவு தொடர்பாக 15.1 ஆம் பெறுகை நிபந்தனையின் பிரகாரம் பற்றுச்சீட்டு பெறப்பட்ட பின்னர் 30 நாட்களுக்குள் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், இயந்திரம் மற்றும் பற்றுச்சீட்டு 2017 ஏப்ரல் 27 இல் பெறப்பட்டமையால் கொடுப்பனவானது 2017 ஆகஸ்ட் 31 வரை தாமதப்படுத்த வேண்டியிருந்தது.

(ஈ) வரைபட ஸ்கானரானது தேவையான விதப்புரைகளுடன் இணங்குகின்றது என தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவானது சிபார்சு செய்யப்பட்டிருந்த போதிலும் ஒப்ரிகல் கறக்தரர் ஹகக்னைசன் (ஓசீஆர்) வசதியானது உரிய வசதி தொடர்பில் வழங்குனர்களால் பயிற்சி வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3.13 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்பொன்று கீழே தரப்பட்டுள்ளது.

புதிய கட்டிடத்திலுள்ள இடங்களிலுள்ள நான்கு மாடிகளிலும் பெரிய அளவிலான தீட்டப்பட்ட இறாக்கைகள் இருந்த போதிலும், நிர்மாணத்தின் பின்னர் 04 ஆண்டுகள் குறுகிய காலப்பகுதியில் அத்தகைய முறையில் இறாக்கைகளை அமைத்தல் பயன்படுத்த முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக, இத்தகைய இறாக்கைகளை இந்த புதிய கட்டிடத்தின் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மாடிகளிற்காக நடமாடும் இறாக்கையிடும் முறைமையினை ஸ்தாபித்த பின்னர் கட்டிடங்கள் மேலும் இந்த இறாக்கைகள் அதிகரிப்பதன் இடரானது கணக்காய்வில் தவிர்க்க முடியாதிருந்தது.

## 3.14 முகாமைத்துவ குறைபாடுகள்

கணக்காய்வு தெரிவு செய்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 169 மில்லியன் தொகையான நடமாடும் இறாக்கையை பொருத்துவதற்கான ஒப்பந்தமொன்றிற்காக உடன்படிக்கையின் நிபந்தனை 26(1) இன் பிரகாரம் வேலையானது 2016 திசெம்பர் 26 இற்கு முன்னர் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், அந்தக் காலப்பகுதியானது 2017 மார்ச் இரண்டாம் கிழமைக்கு நீடிக்கப்பட்டிருந்தது. இந்த வேலையானது பூர்த்தி செய்யப்பட்டு அத்திகதியில் கையளிக்கப்பட்டிருக்காததுடன் செயலாற்றல் பிணைமுறியின் காலப்பகுதியில் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், 2017 யூன் 22 இல் உள்ளவாறு 112 நாட்கள் காலதாமதத்திற்காக அறவிட வேண்டிய சுணக்க கட்டணம் ரூபா 16.9 மில்லியன் ஆகும்.

(ஆ) 117 நபர்களை உள்ளடக்கிய தேசிய சுவடிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களிற்காக பொருத்தமான இடமில்லாதிருந்ததுடன் பயறிச் பாடநெறிகளிற்காக பங்குபற்றுகின்ற நபர்கள் நீண்டகாலமாக சிற்றுண்டிச்சாலை மூடப்பட்டமையால் சிற்றுண்டிகளை வைத்திருக்க வேண்டி ஏற்பட்டது.

(இ) 2015 ஆம் ஆண்டில் ரூபா 6,000,000 தொகையால் கொள்வனவு செய்வதற்கு மதிப்பிடப்பட்ட வரைபட ஸ்கானர் 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருக்காமல் 2017 ஆம் ஆண்டில் ரூபா 15,752,859 தொகைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதனால், ஆரம்ப மதிப்பிடப்பட்ட விலையை விட 162 சதவீதம் அந்த இயந்திரத்திற்காக மேலதிகமாக செலுத்தப்பட்டது.

## 3.15 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 30 | 05 | 25 |
| (ii) | மூன்றாம் நிலை | 12 | 10 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 164 | 51 | 113 |
| (iv) | ஆரம்ப நிலை | 85 | 51 | 34 |
| | **மொத்தம்** | **291** | **117** | **174** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ''அறிக்கைகள் பாதுகாப்பாளர்'' என பெயரிடப்பட்ட பதவியானது ''காப்பக பாதுகாப்பு உத்தியோகத்தர்'' ஆக திருத்தப்பட்டதுடன் 28 பதவிகளானது திணைக்களத்தின் மீளகட்டமைப்பின் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்டதுடன் அந்த திணைக்களமானது அந்தப் பதவியின் பெயரை மீண்டும் ''காப்பக பாதுகாப்பாளராக'' மாற்றுவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியை பெறவேண்டியிருந்தது. எனினும், திணைக்களத்தால் பல வருடங்களுக்கு முன்னர் ஒன்றிணைக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கையானது அந்த செயற்பாடு அத்திகதி வரை பூர்த்தி செய்யப்படாமை தொடர்பாக மாற்றப்படாமல் வைப்பகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) தற்போது ஒரு அலுவலகர் மற்றும் உதவியாளர் நுண்பாக பிரிவிலுள்ள சேவைகளில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததுடன், அந்தப் பிரிவிலுள்ள உத்தியோகத்தரின் பற்றாக்குறையால் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்ற அனைத்து பத்திரிகைகளையும் படம்பிடிப்பதற்கு இயலாதிருந்தது. அந்தப் பிரிவில் வேலைக்கமர்த்தப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்கள் 2008 ஆம் ஆண்டு மற்றும் 2017 யூன் அளவில் ஓய்வு பெற்றிருந்த போதிலும், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக பொதுமக்களின் வேண்டுகோளுகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் பிரதிகளை வழங்கும் செயற்பாடானது அந்தப் பிரிவில் செயற்படுத்த வேண்டியிருந்தது.

(இ) பத்திரிகை நிறுவனங்களிடமிருந்து அவற்றின் மென் பிரதிகளை பெறுவதன் மூலம் பத்திரிகைகளினை பாதுகாக்கும் செயற்பாட்டை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் செய்முறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வரைபட எண்முறையாக்கல் செயற்திட்ட திட்டத்தின் பிரகாரம், வரைபட எண்டுறைப்படுத்தல் இயந்திரத்தை செயற்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கட்புல ஒலி இயந்திரத்தின் 08 (மீள்கட்டமைப்பு செய்முறையின் கீழுள்ள கட்புல ஒலி பதிவேடுகள் பாதுகாவலர் அலுவலர்) பதவிகளானது திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக அனுமதிக்கப்பட்ட போதிலும் தற்போது சேவையில் ஒரு உத்தியோகத்தர் மட்டுமே இருந்தார். இந்த உத்தியோகத்தர் ஓய்வூதியத்தை எதிர்பார்த்திருந்த போதிலும், இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.